

## 2024 நாடாளுமன்றத் தேர்தல் ‘இந்தியா கூட்டணி’ வேட்பாளர்களை ஆதரித்து

கலைஞர் 100 1924 - 2023

# கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்

2024 ஏப்ரல் 19–அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ‘இந்தியா கூட்டணி’ வேட்பாளர்களை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகளை சேகரித்து வருகிறார். அவரின் 2–வது கட்ட தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயண விவரம் வருமாறு:–

### 30.03.2024, சனிக்கிழமை

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | அண்ணா பேருந்து நிலையம் அருகில், மதுராந்தகம், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் | காஞ்சிபுரம் |
| 2 | மதியம் 12.00 மணி | நான்கு முனை சிக்னல் சந்திப்பு, விழுப்புரம், விழுப்புரம் தெற்கு மாவட்டம். | விழுப்புரம் |
| | | மதிய உணவு இடைவேளை | |
| 3 | மாலை 4.30 மணி | மணிக்கூண்டு சாலை, உளுந்தூர்ப்பேட்டை, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம். | விழுப்புரம் |
| 4 | மாலை 5.30 மணி | கடைவீதி, விருத்தாசலம், கடலூர் மேற்கு மாவட்டம். | கடலூர் |
| 5 | இரவு 7.00 மணி | நான்கு சாலை சந்திப்பு, ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம் | சிதம்பரம் |
| 6 | இரவு 8.00 மணி | கடைவீதி நான்கு முனை சந்திப்பு, காட்டுமன்னார்கோவில், கடலூர் கிழக்கு மாவட்டம் | சிதம்பரம் |

### 31.03.2024, ஞாயிற்றுக்கிழமை

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | தெற்கு ரத வீதி, சிதம்பரம், கடலூர் கிழக்கு மாவட்டம் | சிதம்பரம் |
| 2 | காலை 11.30 மணி | சீமாட்டி சிக்னல், நான்கு முனை சந்திப்பு, கடலூர், கடலூர் கிழக்கு மாவட்டம் | கடலூர் |
| | | மதிய உணவு இடைவேளை | |
| 3 | மாலை 4.30 மணி | வில்லியனூர் கிழக்கு மாட வீதி சந்திப்பு, புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |
| 4 | மாலை 5.30 மணி | மரப்பாலம் சந்திப்பு, புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |
| 5 | இரவு 6.30 மணி | அண்ணா சதுக்கம், புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |



அன்பகம்
சென்னை – 18.
நாள் : 27–03–2024.

என்னிடத்தில் வைத்திருந்த அன்பை மாற்றிக்கொள்ளாத

# ஈரோடு கணேசமூர்த்தி மறைந்துவிட்டாரே!

## அமைச்சர் துரைமுருகன் உருக்கம்!

‘ஈரோடு கணேசமூர்த்தி மறைந்துவிட்டார்’
என்ற செய்தி கேட்டு பலத்த அதிர்ச்சிக்கு உள்ளானேன்!
கல்லூரி படிக்கிற காலம் தொட்டு
அவர் கண் மூடுகிறகாலம் வரையில்
எனக்கு இனிய நண்பர்!
மாணவ தி.மு.க.வில் மகத்தான சேவை செய்தவர்!
தி.மு.க.வில் மாவட்டக் கழகச் செயலாளராக சிறப்பாகப் பணியாற்றியவர்!
ம.தி.மு.க.விற்கு அவர் சென்றபிறகும் கூட
தலைவரிடத்தில் மகத்தான மரியாதை வைத்திருந்தவர்!
அவர் மரணத்தை நோக்கி ஒவ்வொரு அடியாக எடுத்து வைக்கிறார்
என்ற செய்தி எனக்கு வந்தபோதெல்லாம்
எப்படியும் பிழைத்துக் கொள்வார்
என்று பெரிதும் விரும்பி இருந்தேன்!
அவர் கட்சி மாறிய பொழுதும்,
என்னிடத்தில் வைத்திருந்த அன்பை மாற்றிக் கொள்ளாதவர்!
அவரை இழந்து வாடுகிற அவருடைய குடும்பத்தினருக்கும்
அவர் இழப்பால் பெரிதும் நிலைகுலைந்து போயிருக்கும்
என் நண்பர் வைகோவிற்கும்
என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்!



**துரைமுருகன்**
கழகப் பொதுச்செயலாளர்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**வாணியம்பாடி வீ. சிவாஜிகணேசன்**
**மார்ச் 30 (2015)**



வேலூர் மாவட்டம், வாணியம்பாடி நகரக் கழகச் செயலாளராக 25 ஆண்டுகள் தொடர்ந்து கழகப் பணியாற்றியவர்.

வாணியம்பாடி நகர்மன்ற உறுப்பினராக 10 ஆண்டுகளும்; வாணியம்பாடி நகர்மன்ற தலைவராக ஒரு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்நகர மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி துணைத் தலைவராகவும், வாணியம்பாடி நகர கூட்டுறவு வங்கித் தலைவராகவும், தென்னக ரயில்வே துறை ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமக்கல் கிழக்கு, மேற்கு, தெற்கு நகர தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம் நாமக்கல்லில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் மா. மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், நகரச் செயலாளர்கள் ராணா ஆனந்த் , பூபதி, சிவக்குமார் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கடலூர் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் டாக்டர் எம்.கே.விஷ்ணுபிரசாத்தை ஆதரித்து

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விருத்தாசலத்தில் வாக்குச் சேகரிக்கிறார்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் அறிக்கை!

*கடலூர், மார்ச் 30 -*

கழக இளைஞரணி செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விருத்தாசலத்தில் பிரச்சா ரம் செய்வது தொடர்பாக மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் சி.வெ. கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நடைபெற இருக்கின்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் கடலூர் நாடாளுமன்ற தொகுதியில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் டாக்டர் எம்.கே. விஷ்ணு பிரசாத்தை ஆதரித்து கழக இளைஞரணி செயலாளர்- விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலம் கடைவீதியில் இன்று (30.3.2024) சனிக்கிழமை மாலை 5 மணி அளவில் கைச்சின்னத்திற்கு வாக்கு கேட்டு பிரச்சாரம் செய்கிறார்.



அது சமயம் ‘இந்தியா’ கூட்டணி கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள் மாவட்ட தலைவர்கள் மற்றும் கழக ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் தொ.மு.ச நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் என மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



புதுச்சேரியில் காங்கிரஸ் வேட்பாளர்வைத்திலிங்கம், நேற்று கனக செட்டிகுளத்தில் நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தை துவக்கினார். இதில் எதிர்க்கட்சித்தலைவர் இரா. சிவா பேசினார்.